# FAMOUS MORAL STORIES

Indian Vedic School
Language of the Gods

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 14


















# INDEX


| | |
|---|---|
| THE TRUTH | 1-6 |
| THIEF | 7-14 |
| TREASURE | 15-23 |
| TRICK | 24-34 |
| UNKNOWN MISTAKE | 35-41 |
| HORSE TRAINER | 42-47 |


உண்மை


அரசர் பிங் வென் ஜின்ஞன் ராஜ்யத்தை ஆண்டு வந்தார். அவருக்கு வாரிசு இல்லை.
ஒரு நாள் நோய் வாய் பட்டு அவர் இறந்து போனார். ராஜ்யத்தை ஆள வேறு யாரும் இல்லை. அரசவையில் சங் பு திறமையானவராகவும் ஞானியாகவும் இருந்தார்.
அரசர் இல்லாமல் இந்த ராஜ்ஜியம் எவ்வளவு காலம் இருக்க முடியும்?
டாங் ஹாய் ஒரு தத்துவவாதி. அவர் எப்பொழுதும் சங் பு சரியான முடிவுகள் எடுக்க வழிகாட்டுவார்.
இந்த கடினமான சூழ்நிலையில், நம் நாட்டை ஒற்றுமையாக வைக்க மற்றும் எதிரிகளிடமிருந்து காப்பாற்ற நீங்கள் தான் உதவ வேண்டும்.
நான் எப்பொழுதும் உனக்கு உதவுவேன்.


சங் பு டாங் ஹாயின் உதவியுடன் நாட்டில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நாட்டினார். சங் பூவுடன் மக்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தனர்.
சங் பு மிகவும் திறமையான மனிதர். அவர் மிகவும் சக்தியானவர் மேலும் நாட்டின் அனைத்து முக்கியமான நெருக்கடிகளையும் சமாளிக்க கூடியவர்.
அவர் அரசராக இருக்க தகுதி உடையவர்.
ஜின்ஹுன் நாட்டின் மக்கள் சங் பூவை மன்னராக முடிசூட்ட முடிவு செய்தனர்.
ஆனால் அரசவையில் கோங்க்லி, மெங் யோ என்ற இருவர் சங் பு மேல் மிகுந்த பொறாமையுடன் அவர் அரசராவதை எதிர்த்தனர்.


சங் பு நாட்டு மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் அளித்ததில் எங்கள் துணை இருந்தது. இதன் புகழை அவர் தனியாக பெற முடியாது.
சங் பூவை அரசராக பரிந்துரைப்பது சரியல்ல. அதற்கு பதிலாக, நாட்டின் மக்கள் சில உறுப்பினர்களை நாட்டை ஆள்வதற்கு தேர்வு செய்யட்டும்.
நாட்டின் மக்கள் கோங்க்லி மற்றும் மெங் யோ சொல்வதை ஏற்கவில்லை, சங் பூவை அரசராக ஒரு மனதாக முடிசூட்டினார்கள்.
சங் பு அரசராகவும், டாங் ஹாய் ஆலோசகராகவும் ஆனார்கள்.


மக்கள் சங் பூவின் ஆட்சியில் மிகவும் சந்தோஷமாக இருந்தனர்.
நமது அரசர் பள்ளிகூடம், மருத்துவமனை, குடிநீர் கிணறுகள் அமைத்தார். நமது வசதிக்கு தேவையான அத்தனை விஷயங்களையும் வழங்கியுள்ளார்.
இந்த குறுகிய காலத்தில் அரசர் அத்தனை வசதிகளையும் எப்படி வழங்க முடியும்?
கோக்லி, மெங் யோ எப்பொழுதும் அரசரை விமர்சித்து கொண்டிருந்தனர். சங் பு மற்றும் டாங் ஹாய் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.
கோங்க்லி, மெங் யோ இருவரும் நாட்டில் விரும்பத்தகாத சூழ்நிலையை உருவாக்குகிறார்கள்.
கோங்க்லி, மெங் யோ உன் மேல் பொறாமையாக இருப்பது அனைவருக்கும் தெரியும். நீ நாட்டு மக்களுக்கு அன்பும் பாசமும் காட்டும் வரை அவர்களும் உன் மேல் விசுவாசமாக இருப்பார்கள்.
பெரியவர்கள் சொல்வது போல், எதிரிகளை எப்பொழுதும் சுதந்திரமாக விட கூடாது. கோங்க்லி, மெங் யோ எப்பொழுதும் என்னை விமர்சித்துக்கொண்டு, எனது முடிவுகளுக்கு இடையூறாகவே இருக்கிறார்கள். அவர்களை சுதந்திரமாக விடுவது சரியா?


நீ கோங்க்லி, மெங் யோவுக்கு அனாவசியமாக முக்கியத்துவம் தந்தால், அவர்கள் தவறான காரணங்களுக்காக பிரபலமாவார்கள்.
அவர்களை ஒழிக்க ஏதாவது வழி உள்ளதா?
கோங்க்லி, மெங் யோ எப்பொழுதும் உன்னை தாழ்த்தி காட்டுகிறார்கள். அதனால், அவர்கள் எந்த ஒரு விஷயம் சொன்னாலும் நீ உனது தவறுகளை திருத்தி கொள். இதன் மூலம் நீ மக்களுக்கு மிகவும் அருகில் செல்ல முடியும் மேலும் அவர்கள் மனதிலும் இடம் பிடிக்க முடியும்.
நீ அவர்களை உனது எதிரியாக நினனத்து மீண்டும் மீண்டும் தண்டனை தந்தால் அவர்களுக்குமக்களின் அனுதாபம் கிடைக்கும். அதனால் சில சமயம் நீ உனது எதிரிகள் சொல்லை கேட்டு உன்னை மேம்படுத்தி கொள்ள வேண்டும்.
உங்கள் வழிகாட்டுதலை பெறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். இன்று முதல், நான் மக்களின் கருத்துக்களை ஏற்று கொள்வேன்.
சங் பு வெற்றிகரமான அரசரானார்.
முற்றும்


திருடன்



ஜக்தீப் ஒரு ஏழை மேலும் தனக்கு தேவையான அளவு
சம்பாதிக்க முடியாததால் திருடனாக முடிவு செய்தான்.
ஜக்தீப் வீடுகள் இருந்த ஒரு தெருவை கவனித்துக்கொண்டிருந்தான்.
ஜக்தீப் ஆட்களே இல்லாத வீட்டைக்
கண்டுபிடிக்க முயற்சித்தான்.
இந்த வீடு
மிகவும் நன்றாக உள்ளது.
வீட்டில் உள்ள அனைவரும்
நகரத்திற்கு வெளியே
சென்றுள்ளார்கள். ஒரே ஒரு
வயதான மனிதன் தான்
இருக்கிறார்.


ஜக்தீப் சத்தம் போடாமல் தேடுகிறான்.
ஜக்தீப் வயதான மனிதன் தூங்கி கொண்டிருந்த அறையை அடைந்தான்.
திடீரென, ஜக்தீப்பின் கால் ஒரு தண்ணீர் கோப்பையில் இடறியது. அந்த சத்தம் கேட்டு வயதான மனிதன் சத்தம் வந்த திசையை நோக்கினார்.
TANGHHH...
யார் அங்கே?
ஜக்தீப் அந்த வயதான மனிதனின் கழுத்தில் கத்தியை வைத்தான்.
நான் திருடன். சத்தம் போடாதீர்கள். அனைத்து பணமும் எங்கு இருக்கிறது. சொல்லவில்லையென்றால் கொன்று விடுவேன்.


நீ திருடனா அல்லது கொலையாளியா என எனக்கு தெரியாது. எனக்கு இப்பொழுது நீ கடவுள். நான் மிகுந்த காய்ச்சலால் அவதிப்படுகிறேன்.
என்னால் எனது படுக்கையிலிருந்து எழ முடியவில்லை.
நான் உங்களுக்கு எப்படி உதவ முடியும்? நான் திருடன் தான்.. மருத்துவர் அல்ல.
எனது மருத்துவர் அந்த நான்கு கட்டடங்களுக்கு பிறகு உள்ள இளஞ்சிவப்பு கட்டிடத்தில் வசிக்கிறார். தயவு செய்து அவரை கூப்பிடு. கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்.


அவர் உடம்பு சரியில்லாதது போல் பாசாங்கு செய்கிறாரோ?
ஜக்தீப் அந்த வயதான மனிதனின் கழுத்தை தொட்டு அவருக்கு நிஜமாகவே காய்ச்சல் இருக்கிறதா என பார்த்தான்.
கடவுளே, இவர் உடம்பு இவ்வளவு கொதிக்கிறதே
ஜக்தீப் மருத்துவரை கண்டுபிடித்து அவருக்கு நிலைமையை எடுத்து சொன்னான்.
மருத்துவரே, தயவு செய்து வாருங்கள். அவருக்கு கடும் காய்ச்சல்.
மருத்துவர் வயதான மனிதரை சோதித்து பார்க்கிறார்.


இந்த மாத்திரையை காலை வரை மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுங்கள்.
ஜக்தீப் இரவு முழுதும் விழித்திருந்து அவருக்கு மருந்தளித்தான்.
மகனே, நான் இப்பொழுது சரியாகி விட்டேன். மிக்க நன்றி.


நீ இங்கு திருட வரவில்லை, என்னை கவனித்துக்கொள்ளத் தான் வந்திருக்கிறாய்.
நீ பிடி படுவாய் என உனக்கு பயமாக இல்லையா?
ஐயா, நான் பிடி பட்டிருந்தாலும், இறந்திருக்க மாட்டேன். ஆனால், உங்களை விட்டிருந்தால், உங்கள் வாழ்க்கைக்கு ஆபத்து வந்திருக்கும். அதனால் தான் நான் இருந்தேன்.
வயதான மனிதர் ஜக்தீபுக்கு பணம் தருகிறார்.
நீ என்னை காப்பற்றியதற்காக நான் உனக்கு பணம் தரவில்லை. உன்னை போல் கனிந்த உள்ளம் கொண்டவர்கள் திருடக் கூடாது. இந்த பணத்தை வைத்து கொண்டு ஏதாவது தொழில் தொடங்கு.


ஜக்தீப் பணத்தை வைத்து வியாபாரம் செய்கிறான்.


ஜக்தீப் நிறைய சம்பாதித்து பணக்காரனாகிறான்.


ஜக்தீப் அந்த வயதான மனிதரிடம் பணத்தை திரும்ப தருவதற்காக சென்றான்.
ஐயா, நான் இந்த பணத்தை திரும்ப தரவில்லையென்றால் எப்பொழுதும் திருடனாகவே இருப்பேன். தயவு செய்து இந்த பணத்தை திரும்ப பெற்று கொள்ளுங்கள்.


நான் சரியாக யோசித்தேன். அவன் திருடனாக இருப்பதற்கு தகுதியற்றவன்.
முடிவு


புதையல்


சைனாவில், சி சிங் ஹென்க் என்று ஒரு உயர்ந்த ஷாலின் அறிஞர் மற்றும் துறவி இருந்தார். அவரை எந்த துறையிலும் விவாதத்தில் யாரும் ஜெயிக்க முடியாது.
ஒரு நாள் தன் சீடர் ஜெட் லீ உடன் பேசி கொண்டிருக்கும் பொழுது அரசரின் வீரர் கடிதத்துடன் வந்தார்.
நீங்கள் உங்கள் வரியை கட்ட வில்லை. அரசர்மிகவும் கோபமாக உள்ளார். உடனடியாக வரி கட்டி விடுங்கள்.
சி சிங் ஹென்கிற்கு தனது தலைவரின் நிதி நிலையை பற்றி நன்றாக தெரியும்.
நாங்கள் துறவிகள்; பணக்காரர்கள் அல்ல.



சென்று அரசரிடம் சொல்லுங்கள், எங்களிடம் பணம் இல்லை ஆனால் நாங்கள் அரசவைக்கு வந்து யாரை வேண் டுமானாலும் விவாதத்தில் வீழ்த்த முடியும்.
வீரர் அரசருக்கு நடந்ததை பற்றி சொல்கிறார்.
நல்லது. சி சிங் ஹென்கை நாளை அரசவைக்கு வர சொல்லு.
அரசி அரசரின் கட்டளையை கேட்டார்கள். அரசிக்கு சி சிங் ஹென்கின் மெய்யறிவை பற்றி நன்றாக தெரியும்.
அரசரே, நமது அரசவையில் யாராலும் சி சிங் ஹென்கை விவாதத்தில் வீழ்த்த முடியாது.


அரசருக்கு அரசி சி சிங் ஹென்கை புகழ்ந்து பேசியது பிடிக்க வில்லை.
நமது அரச அறிஞர் வு ஜேடியன் யாரை வேண் டுமானாலும் வீழ்த்துவார்.
அரசர் அரசவையில் அறிவிப்பு செய்கிறார்.
சி சிங் ஹெங் வெற்றி பெற்றால், எனது ராஜ்யத்தில் பாதியை நான் அவருக்கு தருகிறேன். ஆனால் தோல்வியுற்றால், அவர் அடுத்த ஆறு மாதம் எனது அடிமையாக இருக்க வேண்டும்.
அடுத்த நாள், வு ஜேடியன் சி சிங் ஹெங் அரசவையில் நுழைவதை பார்த்து சிரிக்கிறார்.
இந்த சிறுவனா என்னைவீழ்த்துவான்? என்னை போல் ஒரு அரச அறிஞருக்கு ஒரு சிறுவனுடன் விவாதிப்பது அவமானம்.


நான் உனக்கு ஒரு சுலபமான வாய்ப்பு தருகிறேன். நீ ஏதேனும் மூன்று வாக்கியங்கள் சொல், அதை தவறென்று, நான் நிரூபிக்கிறேன். முடியவில்லையென்றால், நான் தோற்றதாக ஒப்பு கொள்கிறேன்.
உங்களை பெற்றெடுத்த தாய் குழந்தையில்லாதவரில்லை. இரண்டாவது: இந்த அரசர் ஒரு பேரரசர். மூன்றாவது: அரசரின் மனைவி அவருக்கு விசுவாசமாக இருக்கிறார். இந்த வாக்கியங்களை தவறென்று நிரூபியுங்கள்.
வு ஜேடியன் வாயடைத்து போனார். அரசவையில் அனைவரும் கர கோஷமிட்டனர். சி சிங் ஹெங் ஜெயித்தார்.
வாக்களித்தபடி, அரசர் தனது ராஜ்ஜியத்தில் பாதியை சி சிங் ஹென்கிற்கு அளித்தார்.


பாதி ராஜ்ஜியம் கிடைத்த பிறகு, சி சிங் ஹெங் திருமணம் செய்து கொண்டார். தனது மத வழக்கங்களை மறந்து போனார்.
ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. ஒவ்வொரு நாளும், ஒரு வயதான மனிதர் சி சிங் ஹென்கின் வீட்டிற்கு வந்து ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த காயை வழங்குவார்.
சி சிங் ஹென்க் இந்த காய்களை ரசிக்க ஆரம்பித்தார். ஆறு மாதத்திற்கு பிறகு, ஒரு நாள் அந்த வயதான மனிதர் வரவில்லை.
இன்று நீ எனக்குப் பிடித்த காயை பரிமாற வில்லையே?


அரசே, ஒவ்வொரு நாளும் ஒரு வயதான மனிதர் அந்த காயை இலவசமாக அளிப்பார். இன்று அவர் வரவில்லை. அதனால் தான் அந்த காயை பரிமாறவில்லை.
சி சிங் ஹென்க் திகைத்து போனார்.
நாளை அவர் வரும் பொழுது அவரை என்னிடம் அழைத்து வாருங்கள்.
அடுத்த நாள் அந்த வயதான மனிதன் சி சிங் ஹென்க்கிடம் அழைத்து வரப்பட்டார்.
இந்த காயை எனக்கு இலவசமாக எதற்கு கொடுக்கிறீர்கள்?
அரசே, நான் உங்கள் தாத்தாவின் சீடர். அவர் ஒரு புதையலை விட்டு சென்றுள்ளார். அதை உங்களுக்கு ரகசியமாக தெரிவிக்க நான் இப்படி ஒரு திட்டம் தீட்டினேன்.


சி சிங் ஹென்க் புதையலை பற்றி அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றார்.
ஒ, அப்படியா, எனக்கு இதை பற்றி இன்று வரை எதுவும் தெரியாது, வாருங்கள், இப்பொழுதே செல்வோம்.
வயதான மனிதன் முன்னே சென்றார். சி சிங் ஹென்க் அவர் பின் நடந்து சென்றார். அவர்கள் ஒரு மாளிகை, கோட்டை, நகரம் அனைத்தையும் கடந்து நகரத்திற்கு வெளியே உள்ள ஒரு கோவிலுக்கு அருகில் வந்தார்கள்.
எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?
நாம் புதையலுக்கு மிக அருகில் வந்து விட்டோம்.


அவர்கள் கோவிலை அடைந்தார்கள். உள்ளே சென்றார்கள்.
அரசே, உங்கள் தாத்தா புதையலை இங்கு தான் விட்டு சென்றார்
சி சிங் ஹென்க் பிரமித்து போனார். மெதுவாக, தான் ஒரு துறவி என்றும் தனது கடமைகளை மறந்து விட் டோம் என்றும் உணர்ந்தார்.
நான் ஒரு முட்டாள். எனது தாத்தாவின் போதனைகளை மறந்து விட்டேன். மேலும் நான் எனது மத சம்பந்தமான வழக்கங்களையும் மறந்துவிட்டேன்.
சி சிங் ஹென்க் தனது சொத்து மற்றும் ராஜ்ஜியத்தை மக்களுக்கே அளித்து, தனது மீதி வாழ்க்கையை போதனையில் செலவழித்தார்.
முற்றும்

# தந்திரம்




மிர்சாபூர் நிலக்கிழார் கங்காதர் ராவ் அனைத்து
வருமானத்தையும் பொழுதுபோக்குக்காக செலவிட்டார்
பணம் தேவைப்படும் பொழுது தனது சொத்துக்களை
விற்பார். கங்காதர் தனது வருமானத்திற்கு மேல்
செலவு செய்து கொண்டிருந்தார்.
அனைத்து சொத்துக்களையும் விற்ற பிறகு அவர்
மக்களிடம் கடன் வாங்க ஆரம்பித்தார். காலம்
செல்ல செல்ல, ஊர் மக்கள் கடன் தர மறுத்தனர்.



ஒரு நாள்...
உங்கள் நிதி நிலை உங்களுக்கு புரிகிறதா?
ஏன்? என்ன நடந்தது?
நம்மிடம் ஒன்றுமில்லை. நீங்கள் இப்படி பணத்தை செலவழிப்பதை என்னால் பார்க்க முடியவில்லை. நமக்கு ஒரு குழந்தை இருக்கிறது, அதனால் பொறுப்பாக நடந்து கொள்ளுங்கள்.
கங்காதர் தனது தவறை உணர்ந்தார்.
ருக்மிணி, எனக்கு எனது பொறுப்புகளை உணர் த்தியதற்கு நன்றி. ஆனால்...
நான் தொழில் தொடங்க, என்னிடம் பணம் இல்லல.


ஒ, பொழுதுபோக்கிற்கு கடன் வாங்கும் பொழுது, தொழில் செய்ய கடன் வாங்க முடியாதா?
முடியும்.
கங்காதர் ராவ் அருகில் உள்ள கிராமத்தில் கடன் வாங்க முயற்சிக்கிறார். அனால் முடியவில்லை.
தனது மனைவியிடம் அதை சொல்கிறார்.
மக்கள் உங்களுக்கு கடன் கொடுக்க வேண்டுமென்றால், நீங்கள் அந்த கடனை திரும்ப செலுத்துவீர்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வர வேண்டும்.
ம்ம்ம்ம்..



என்னிடம் ஒரு யோசனை உள்ளது. ஆனால் அதற்கு முன், நீங்கள் மாறி விடுவீர்கள் என்று உறுதியளிக்க வேண்டும்.
நீ என் மேல் நம்பிக்கை வை. இன்று முதல், நான் கடினமாக உழைத்து நாம் இழந்த அனைத்தையும் மீட்டு விடுவேன்.
நாளை நமது மகனின் பிறந்த நாள். நாம் அதற்கு நமது கிராமம் மற்றும் அருகில் இருக்கும் கிராமத்தில் உள்ள பணக்காரர்கள் எல்லோரையும் அழைப்போம்.
ஆனால், அது எப்படி உதவும்?
என் மேல் நம்பிக்கை வையுங்கள். நாள் சொல்வதை கேளுங்கள்.


கங்காதர் ராவ் ருக்மிணி சொன்னதைப் போல் எல்லோரையும் அழைக்கிறார்.
நன்றி. நாங்கள் வருகிறோம்.
நான் நிச்சயமாக செல்ல வேண்டும். அப்பொழுது தான் எனக்கு அவரின் உண்மை நிலை என்னவென்று தெரியும்.
அனைத்து சொத்துக்களையும் இழந்ததாக கேள்விப்பட்டேனே, இப்பொழுது என்ன செய்கிறார் என்று சென்று பார்க்கவேண்டும்.
நான் வருகிறேன்.


மறு நாள், எல்லோரும் பிறந்த நாள் விழாவிற்கு வருகை தந்து, விலையுயர்ந்த தங்கம், வெள்ளி தட்டுகள், தங்க மோதிரங்கள், சங்கிலிகள், பணம் அனைத்தும் தருகிறார்கள்.
கங்காதரின் மகனின் பிறந்த நாள் விழா சிறப்பாக நடந்தது.
எல்லோரும் உணவு உண்ண அமர்ந்தார்கள். உணவு வெள்ளித் தட்டில் பரிமாறப்பட்டது.


அனைவரும் சாப்பிட்டு முடித்தனர்.
ருக்மிணி இந்த தட்டுகளை ஏழைகளிடம் கொடுத்து விடு.
அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியுற்றனர்.
என்ன?
இந்த தட்டுகள் அனைத்தையும் கொடுத்து விட போகிறீர்களா?
ஆமாம். எனக்கு அவைகளை திரும்ப உபயோகிக்க பிடிக்க வில்லை. என்னிடம் அடுத்த பத்து தலைமுறையினருக்கு தேவையான அளவு சொத்து உள்ளது.
விருந்தினர்கள், ருக்மணி வேலை செய்பவர்களுக்கு தட்டுகள் கொடுக்க பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.


நான் கங்காதர் மூதாதையர்கள் அரசர்கள் என்று என் தாத்தா சொல்ல கேள்விப்பட்டேன்.
ஆமாம். உண்மையாக இருக்கலாம். அவர்கள் எப்படி வெள்ளி தட்டை தானம் செய்தார்கள் என்று பார்க்கவில்லையா?
ருக்மணி, நீ இப்போது எனக்கு விளக்கமாக சொல்.
சொல்கிறேன். அதற்கு முன் அந்த தட்டுகளை வாங்கி வருகிறேன்.


ருக்மிணி பணம் கொடுத்து மீண்டும் தட்டுகளை அவர்களிடமிருந்து பெற்று கொண்டாள்..
ருக்மிணி தனது கணவரிடம் திரும்பி வருகிறாள்.
கண்ணே, மக்கள் சமுதாயத்தில் நல்லெண்ணம் மற்றும் நல்ல பெயர் உள்ளவர்களுக்கு தான் கடன் வழங்குவார்கள்.
அதற்காக தான் நான் இந்த நாடகம் போட வேண்டியிருந்தது. நான் வெள்ளி தட்டுகளை வாடகைக்கு எடுத்து அவர்களுக்கு தானம் செய்வது போல் செய்தேன். ஒரு செயல் வெற்றிகரமாக இருந்தது.
நிச்சயமாக.
இப்போது, மக்கள் உங்களை அதிக மரியாதையுடன் பார்க்கிறார்கள்.


கங்காதர் தனது மனைவி மேல் பெருமை அடைந்தார்.
சமுதாயத்தில் களங்கமடைந்த எனது பெயர் சீர்பெற்றது. ருக்மிணி, நான் உன்னை மனைவியாக அடைந்தது என் பாக்கியம்.
நிறைய விலைமதிப்புள்ள பரிசுகள் வந்துள்ளன, நாம் இதை புத்திசாலித்தனமாக உபயோகித்து அனாவசியமான செலவுகளை குறைப்போம்.
நிச்சயமாக.
தனது மனைவிக்கு வாக்களித்த படி, கங்காதர் ஒரு மாறிய மனிதனானார். அனைத்து கெட்ட பழக்கங்களையும் விட்டு, நன்றாக உழைத்து பணத்தை மதிக்க ஆரம்பித்தார்.
முடிவு


தெரியாததவறு


சம்பா தனது மாமியாரின் கொடுமை தாங்க முடியாமல் வாழ்க்கையை வெறுத்தாள்.
நீ யார்? ஏன் என் மரத்திற்கு கீழ் அமர்ந்து அழுது கொண்டிருக்கிறாய்?
ஒரு நாள் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள். மரத்தில் இருந்த பேய் இதை பார்த்து வியந்து ஆர்வமாக கேட்டது.
நான் இறக்க ஆசை ப்படுகிறேன். எனக்கு உதவி செய்வாயா?


இரவு நேரத்தில் தனியாக இங்கு என்ன செய்கிறாய்? ஏன் இறக்க ஆசைப்படுகிறாய்?
எனது மாமியார் என்னை கொடுமைப்படுத்துகிறார் நான் இதனால் வாழ்க்கையையே வெறுக்கிறேன். நான் உண்மையாகவே இறக்க ஆசைப்படுகிறேன். அதனால் தான் இங்கு வந்தேன்.
உன்னை பார்த்தால் எனக்கு பாவமாக இருக்கிறது. நான் இது வரை யாருக்கும் உதவி செய்யவில்லை. ஆனால் உனக்கு வேண்டுமானால் சொல்.
சரி. எனக்கு உதவி செய்வதாய் இருந்தால், எனது மாமியாருக்கு பாடம் புகட்டு. எனது மாமியாரை அவர் என்னை கொடுமை ப்படுத்தியது போலவே கொடுமை செய்.
இந்த மாதிரி நடந்தால் ஒரு வேளை அவர் மற்றவர்களின் வலியை புரிந்து கொள்வார்
சரி. நான் உனக்கு உதவி செய்கிறேன்.


சம்பா சென்று விட்டாள்.
சம்பாவின் மாமியார் அவளை எப்படி கொடுமை படுத்தினார் என்று தெரியவில்லையே
நன்றி. அதுவரை நான் எனது பெற்றோர்களின் வீட்டில் வசிக்கிறேன்.
நான் சம்பாவின் வீட்டிற்கு சென்று சில நாட்கள் சம்பாவாக இருந்தால் அவளது மாமியாரின் நடத்தை பற்றி தெரிந்து கொள்ளலாம்.
பேய் சம்பாவாக மாறியது.


கங்காபாய் பேயை பார்த்து தனது மருமகள் என நினைத்து கொள்கிறாள்.
வெட்கம் கெட்டவளே.. இந்த இரவு வேளையில் எங்கிருந்து வருகிறாய்?
மறு நாள்.
என்னை அடிக்காதீர்கள்.
சம்பாவிற்கு இங்கு இருப்பது எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்று எனக்கு இப்பொழுது புரிகிறது.
மறு நாள் கங்காபாய் சம்பாவை உணவு பரிமாறும் பொழுது அடிக்கிறார்.
இப்படி தான் சமையல் செய்வாயா?
DUUDD....


சம்பா தனது பேயுருவத்திற்கு மாறுகிறாள். கங்காபாய் இதை பார்த்து பயந்து மயக்கம் அடைகிறார்.
பேய் திரும்ப மரத்திற்கு வந்தது.
சில நாட்களுக்கு பிறகு, சம்பா அந்த மரத்திற்கு அருகில் வந்தாள்.
நீ எனது மாமியாரை கொடுமை ப்படுத்தினாயா?
இல்லை


நான் உனது மாமியாரின் நடத்தையை பார்ப்பதற்காக உன்னை போல் வேடமிட்டு உனது வீட்டிற்கு சென்றேன். நீ எவ்வளவு வேதனைகள் அனுபவித்தாய் என்று தெரிந்து கொண்டேன்.
அவர் மாறினாரா? இல்லையா?
கவலை ப்படாதே. இனிமேல் அவர் உன்னை தொந்தரவு செய்ய மாட்டார்.
அதன் பிறகு அவளை அவளது மாமியார் தொந்தரவு செய்ய வில்லை.
அவள் மகிழ்ச்சியாகவாழ்ந்தாள். அவளுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர் அவர்களும் திருமணம்செய்து கொண்டனர்.
சம்பாதனதுமருமகள்களை சொந்தமகள்களைபோல்நடத்தினாள் மற்றும்அவர்கள்தங்கள்சொந்ததாயைபோலஅவளைநடத்தினாள்ர்கள்..
முடிவு

# குதிரைப்பயிற்சியாளர்





நிலக்கிழார்எட்வார்ட் ஒரு நாள் தனது மேலாளர் பீட்டரை அழைத்தார்.
பீட்டர், எனது மகன் ஜான் குதிரை சவாரி கற்று கொள்ள வேண்டுமெனஆசை ப்படுகிறான். ஒரு பொருத்த மானகுதிரைபயிற்சியாளர் தேவை.
நான் சிறந்த குதிரை பயிற்சி நிறுவனங்களுக்கு சென்று ஒரு பொருத்தமானகுதி ரைபயிற்சியாளரை கண்டு பிடிக்கிறேன் ஐயா.
பீட்டர் நிறைய நிறுவனங்களுக்கு சென்றுஇரண்டு நாட்களுக்கு பிறகு மூன்று பயிற்சியாளர்களுடன் திரும்பினார்.
ஐயா, இந்த மூன்று பயிற்சியாளர்களும் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். நமது ஜானுக்கு குதிரை பயிற்சி அளிக்க இவர்களை விட திறமைசாலிகளை நம்மால் கண்டு பிடிக்க இயலாது.


ஐயா, இந்த மூவரையும் சோதித்து ஒருவரை தேர்வு செய்யுங்கள்.
எட்வார்ட் முதல் குதிரை பயிற்சியாளரை அழைத்தார்.
என்னுடைய மகனுக்கு பயிற்சி அளிக்க எனக்கு ஒரு பயிற்சியாளர் தேவை. நான் உங்களை ஏன் தேர்வு செய்ய வேண்டும்?
குதிரை சவாரி எனக்கு சிறு பிள்ளை விளையாட்டு போல. நான் எந்த வித குதிரையையும் சவாரி செய்வேன். நான் ஒரு மலையின் மேல் குதிரையை வேகமாக ஓட்டி சென்று அதே வேகத்துடன் திரும்புவேன்.
நிலக்கிழார் தனது வேலையாளை ஒரு குதிரையை கொண்டு வர சொல்கிறார்.
இந்த குதிரையில் சவாரி செய்து உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள்.


குதிரை பயிற்சியாளர் ஒரு மலையின் மேல் வேகமாக சென்று அதே வேகத்துடன் வெற்றிகரமாக கீழே வந்துவிடுகிறார்.
நிலக்கிழார் எட்வார்ட் அடுத்த பயிற்சியாளரை அழைத்தார்.
ஐயா, நீங்கள் உங்கள் திறமையை பற்றி சொல்லுங்கள்.
என்னால் அந்த குதிரையை மலைக்கு மேல் கொண்டு செல்வது மட்டுமல்லாமல், அதை இரண்டு காலிலும் நிற்க வைக்க முடியும்.
சரி. உங்கள் திறமையை பார்க்கலாம்.
குதிரை பயிற்சியாளர் ஒரு மலையின் மேல் வேகமாக சென்று அதே வேகத்துடன் வெற்றிகரமாக கீழே வந்துவிடுகிறார். மேலும் அதை இரண்டு கால்களில் நிற்கவும் வைக்கிறார்.



நிலக்கிழார் எட்வார்ட் மூன்றாவது பயிற்சியாளரை அழைத்தார்.
சரி, நீங்கள் உங்கள் திறமைகள் பற்றி கூறுங்கள்.
ஐயா, எனக்கு எந்த தனித்துவமான திறமைகளும் இல்லை. நான் குதிரை சவாரி செய்ய சாதாரணமான சாலைகள் மற்றும் நிலங்களை தேர்வு செய்வேன்.
உங்களது திறமைகளை காட்டுங்கள்.
குதிரை பயிற்சியாளர் குதிரையை வேகமாகவும் நிதானமாகவும் ஓட்டி குதிரையை வெற்றிகரமாக தன் கட்டுபாட்டுக்குள் வைத்திருந்தார்.


எட்வார்ட் இரண்டு சிறப்பு குதிரை பயிற்சியாளர்களையும் திரும்ப அனுப்பிவிட்டார்.
இளைஞனே, நாளை முதல் எனது மகனுக்கு பயிற்சி அளிக்க வா.
குதிரை பயிற்சியாளர் செல்கிறார்.
ஐயா, எனக்கு குழப்பமாக உள்ளது.நீங்கள் இரண்டு சிறப்பு பயிற்சியாளர்களையும் விட்டுவிட்டு ஏன் மூன்றாவது பயிற்சியாளரை தேர்ந்தெடுத்தீர்கள்?
நீ சரியாக சொன்னாய். அவர்கள் இருவருமே திறமைசாலிகள் தான். அவர்கள் இருவரும் நிறைய நுணுக்கங்கள் தெரிந்தவர்கள். ஆனால் ஒரு புது சவாரி செய்பவருக்கு கற்று கொடுப்பதற்கு கடினமாக இருக்கும் ஏனென்றால் அவர்கள் இருவரும் மிக உயரத்திற்கு சென்று விட்டார்கள். அவர்களுக்கு இது மிகவும் சாதாரணமானதாக இருக்கும்.
பீட்டர், ஜானின் குதிரை சவாரி பயிற்சிக்கு, மூன்றாவது பயிற்சியாளரின் அனுபவம் மற்றும் திறமையே போதுமானது.
பீட்டருக்கு எட்வார்ட் தேர்வு செய்ததின் காரணம் புரிந்தது.
முடிவு



**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**
Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
✉info@indianvedicschool.com